
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1052

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்





- வாழ்வோம்

## கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

தமிழ்.கா.அமுதரசன்

35

# சமூகச் சுரண்டலை எதிர்த்த கலைஞர்!



ஓவியம் : ரவி பேலட்

**கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!**

1974-ஆம் ஆண்டு கலைஞர் தலைமையிலான கழக அரசு, குதிரைப் பந்தயங்களில் நடைபெறும் பந்தயம் கட்டுதல் மற்றும் பணயம் வைத்தல் (wagering/betting) சூதாட்டம், நல்வாய்ப்பு (அதிர்ஷ்டம்) நம்பிக்கைகள், பணக்காரர்களின் பொழுதுபோக்கால் ஏற்படும் பொருளாதாரச் சுரண்டல், ஏழைகளின் பொருளாதார இழப்பு ஆகியவற்றை, சமூக ஒழுக்கத்துக்கு எதிரான செயலாகக் கருதி, அதை முழுமையாக ஒழிக்க, கொண்டு வந்த சட்டம்தான் *The Tamil Nadu Horse Races (Abolition of Wagering or Betting) Act, 1974.* சட்டத்தின் நோக்கம், குதிரைப் பந்தய 'சூதாட்ட நடைமுறை'யை ஒழிப்பதே ஆகும்.

கலைஞர், தனது ஆட்சிக் காலங்களில், தமிழ்ச் சமூகத்தை மேம்படுத்தும் சீர்திருத்தக் கருவியாகவே சட்டத் திருத்தங்களைக் கொண்டு வந்தார். மதம், மூடநம்பிக்கை, நல்வாய்ப்பு (அதிர்ஷ்டம்) சூதாட்டம் போன்றவற்றை சமூகச் சுரண்டலின் வடிவங்களாகக் கண்டவர். அதனால், அவற்றை ஒழிக்க அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தத் தயங்கவில்லை. 1974-ஆம் ஆண்டு குதிரைப் பந்தயத் தடைச் சட்டம் என்பதும், அந்த அணுகுமுறையின் ஒரு வெளிப்பாடுதான்.

ஆனால், இந்திய அரசியலமைப்பின் கட்டமைப்பில், ஒவ்வொரு சமூகச் சீர்திருத்தச் சட்டமும் நீதித்துறையின் பரிசீலனைக்கு உட்பட வேண்டிய கட்டாயம் உள்ளது. அதன் விளைவாக, 1974-ஆம் ஆண்டு கலைஞர் கொண்டு வந்த குதிரைப் பந்தயத் தடைச் சட்டம் மற்றும் அதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்குகள், திராவிட இயக்க அரசியல் மற்றும் நீதித்துறைக்கு இடையிலான ஒரு முக்கிய வரலாற்று நிகழ்வாக மாறின.

கலைஞர் கொண்டு வந்த சட்டத்தை எதிர்த்து, மெட்ராஸ் ரேஸ் கிளப் (MRC) உள்ளிட்டோர் உயர் நீதிமன்றத்தில் ரிட் மனுக்களாகத் தாக்கல் செய்தனர். (*The Madras Race Club v. State of Tamil Nadu (Writ Petitions. Nos. 2355 & 2701 of 1975)* மெட்ராஸ் ரேஸ் கிளப்பின் வாதமாக, குதிரைப் பந்தயம் முழுமையான சூதாட்டம் அல்ல; இது ஒரு சட்டபூர்வ தொழில். முழுமையான அதிர்ஷ்ட விளையாட்டு அல்ல. ஆகவே, 1974 சட்டத்தின் மூலம், தொழில் செய்யும் சுதந்திரம்), சமத்துவம் ஆகியவற்றை மாநில அரசு தடுக்கிறது என்றது. தவிர, மாநில அரசு, தனது அதிகார வரம்பை மீறி ஒரு தொழிலை முழுமையாக ஒழிக்க முயல்கிறது என வாதங்களை முன் வைத்தனர்.

தமிழ்நாடு அரசின் வாதமாக,

1. சூதாட்டம் மற்றும் பந்தயம் கட்டுதல் - மாநில சட்டமன்ற அதிகார வரம்புக்குள் வரும்.

2. குதிரைப் பந்தயம் - சமூக ஒழுக்கத்துக்கு தீங்கு விளைவிக்கிறது.

3. பொது ஒழுக்கம் மற்றும் பொது ஒழுங்கு என்கிற காரணங்களுக்காக அரசு கட்டுப்பாடு விதிக்கலாம்.

4. 1974 சட்டம் - சட்டம் இயற்றும் அதிகாரம் கொண்ட சட்டமன்றத்தால் (*Legislative competence*) உடன் கொண்டு வரப்பட்டது' என்கிற வாதங்களை முன் வைத்தது.

வழக்கு விசாரணைக்குப் பின்னர், 1975 செப்டம்பர் 22 அன்று உயர் நீதிமன்றத்தின் (*Division Bench*) தலைமை நீதிபதி கே.வீராசாமி, நீதிபதி கிருஷ்ணசாமி ரெட்டி ஆகியோர் அமர்வு வழங்கிய தீர்ப்பில், மாநில அரசுக்கு சட்டம் போடும் அதிகாரம் உண்டு என தீர்ப்பு வழங்கப்பட்டது.

> **இன்றைய கேசினோ, இணையதள கேமிங், ஆன்லைன் பந்தயம் தொடர்பான இன்றைய வழக்குகளுக்கும் ஆதாரங்களை அளிப்பதும் இந்தத் தீர்ப்புதான்.**

பந்தயம் வைத்தல் மற்றும் பணயம் கட்டுதல் ஆகியவை மாநில அதிகார வரம்புக்குள் உள்ளவை. (*State List (List II, Schedule VII)* ஆகவே, தமிழ்நாடு அரசு இந்தச் சட்டத்தை இயற்ற அதிகாரமுள்ளது என்றது.

### மாநிலத்துக்கு அதிகாரம் உள்ளது

இந்தத் தீர்ப்புக்கு எதிராக மெட்ராஸ் ரேஸ் கிளப் சார்பாக உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. *Madras Race Club v. State of Tamil Nadu (Civil Appeal), Appeal Number: Civil Appeal No. 1715 of 1975 (N)* மேல்முறையீட்டில் இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதற்கு, உச்ச நீதிமன்றம் கூறிய காரணங்கள், *Article 19(1)(g)* - தொழில் செய்யும் சுதந்திரம், *Article 14* - சமத்துவ உரிமை கேள்வி எழுப்பப்படுகிறது. இந்தச் சட்டம், தொழிலுக்குக் கட்டுப்பாடு விதிக்கலாம். ஆனால், முழுமையான தடை விதிப்பதாக உள்ளது. தவிர, "குதிரைப் பந்தயம் சூதாட்டமா? அல்லது திறமை சார்ந்த செயலா?" என்கிற விளக்கத்தையும் கோரியிருந்தது. குறிப்பாக, சூதாட்டம் என்றால், அதைத் தடை செய்யும் முழு அதிகாரம் அரசுக்கு உள்ளது. திறமை சார்ந்த செயலாக இருந்தால், அது தொழில் உரிமை பெறும் என்றதுடன்,

1974-ஆம் ஆண்டு சட்டம் அமல்பட்டிருந்தால் மெட்ராஸ் ரேஸ் கிளப் மூடப்பட்டால், ஆயிரக்கணக்கான ஊழியர்கள் வேலை இழந்திருப்பார்கள், சொத்துகள், ஒப்பந்தங்கள், வருவாய்கள் அனைத்தும் சிதைந்திருக்கும். அதனால், ஏற்கெனவே உள்ள நிலை தொடர வேண்டும் என்ற அடிப்படையில், இடைக்கால உத்தரவை உச்ச நீதிமன்றம் வழங்கியது.

அந்த வழக்கின் இறுதித் தீர்ப்பை, 1996-ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் வழங்கியது. (*Dr. K. R. Lakshmanan v. State of Tamil Nadu (1996)* இந்தத் தீர்ப்புதான் குதிரைப் பந்தய வழக்குகளின் 'மையத் தீர்ப்பாக' அமைந்தது. குறிப்பாக, தமிழ்நாடு அரசு 1986-ல் கொண்டு வந்த *Tamil Nadu Acquisition of Land for Industrial Purposes Act, 1986* சட்டத்தின் மூலம் மெட்ராஸ் ரேஸ் கிளப் வைத்திருந்த நிலங்களை கைப்பற்ற முயன்றது. ஆனால், சட்டத்திற்கு இடமில்லாதது என அது தொடர்பான வழக்கில் உயர்நீதி மன்றம் ஒரு தீர்ப்பு வழங்கியது. அந்த வழக்கும் 1996-ஆம் ஆண்டு இறுதித் தீர்ப்போடு இணைந்தது. இன்றைய கேசினோ, இணையதள கேமிங், ஆன்லைன் பந்தயம் தொடர்பான இன்றைய வழக்குகளுக்கும் ஆதாரங்களை அளிப்பதும் இந்தத் தீர்ப்புதான்.

...தொடரும்

## மதுரையில் மகத்தான முழக்கம்!

மதுரை, திருப்பரங்குன்றம் விவகாரத்தில், அவசர கோலத்தில் அள்ளித்தெளிக்கப்பட்ட தீர்ப்பால், மக்களின் அமைதி மற்றும் நல்லிணக்கச் சூழல் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டதை அறிவோம். திராவிட மாடல் அரசின் தகுந்த சட்டப் போராட்டங்களால், மக்களின் பொது அமைதி காக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், மதவெறுப்பு அரசியல் சக்திகளுக்கு எதிராக முற்போக்கு இயக்கங்களின், 'மதுரை மத நல்லிணக்க மக்கள் கூட்டமைப்பு' சார்பில், பெரும் பேரணி மதுரையில் நடைபெற்றுள்ளது.

தி.மு.க., காங்கிரஸ், விடுதலைச் சிறுத்தைகள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், மனிதநேய மக்கள் கட்சி, ஆதி தமிழர் பேரவை, திராவிடர் விடுதலைக் கழகம் உள்பட பல்வேறு முற்போக்கு இயக்கங்கள் ஒருங்கிணைந்து, இந்தப் பேரணியை நடத்தி இருக்கின்றன. மதுரை உயர் நீதிமன்ற வளாகம் முதல், உலகத் தமிழ்ச்சங்கம் வரை நடைபெற்ற பேரணியில், சட்டமன்ற உறுப்பினர் அப்துல் சமது, முன்னாள் எம்.எல்.ஏ. கே.பாலபாரதி, இரா.அதியமான் உள்பட பல தலைவர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

ஆயிரக்கணக்கான பொதுமக்கள், மாணவர்கள் கலந்து கொண்டு, 'சமூக அமைதி, மத நல்லிணக்கம் மற்றும் அனைவரின் வழிபாட்டு உரிமைகளைப் பாதுகாத்திட வேண்டும்' என வலியுறுத்தும் முழக்கங்களை எழுப்பினர்.

'மடியட்டும் மதவாதம், மலரட்டும் மனிதத்துவம்' என்கிற முழக்கங்களை, மதுரை மக்கள் உரக்கச் சொல்லும் நிகழ்வாக இந்தப் பேரணி நடைபெற்றது. 'மதுரைக்குத் தேவை வளர்ச்சி அரசியல்'தான் என்பதில் மக்கள் தெளிவாக உள்ளனர். அதை உரத்துச் சொல்கிறது 'மதுரை மத நல்லிணக்க மக்கள் கூட்டமைப்பு'ப் பேரணி.

## ஃப்ளாஷ்பேக்



### தலைவர்களுடன் ஒரு புகைப்படம்!



எஸ்.எஸ்.சுருளிராஜன்

2011-ஆம் ஆண்டு கழக இளைஞர் அணி நிர்வாகிகள் அறிமுகம் மற்றும் ஆலோசனைக் கூட்டம், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சியில், கழகத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர், பொதுச் செயலாளர் இனமானப் பேராசிரியர், இன்றைய கழகத் தலைவர் தளபதி ஆகியோருடன், தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் குழு, புகைப்படம் எடுத்துக்கொள்ளும் வாய்ப்பு அமைந்தது. ஒருங்கிணைந்த மாநகர அமைப்பாளர் தர்மராஜா, சிவக்குமார், ஜெரால்டு ஜெயசீலன், மு.அ.ஜாபர் அலி ஆகியோருடன் துணை அமைப்பாளராகத் தேர்வாகிய நானும், மேடையில் தலைவர்களிடம் வாழ்த்துப் பெற்று புகைப்படம் எடுத்துக்கொண்ட நிகழ்வை மறக்க முடியாது.

**- எஸ்.எஸ்.சுருளிராஜன்,**
**20-வது வட்டக் கழகச் செயலாளர், கிழக்கு மாநகரம் - மார்க்கெட் பகுதி, திருச்சி தெற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### தி.மு.கழகத்தினர் அனைவரும் திராவிடர்!

1958-ஆம் ஆண்டு, மே மாதம் 10 மற்றும் 11-ஆம் தேதிகளில் தஞ்சை மாவட்டக் கழகத்தின் 3-வது மாநாடு நடைபெற்றது. மாநாட்டில் வழக்கறிஞர் வி.பி.இராமன் 'The New Spirit of the South' என்கிற தலைப்பில், ஆங்கிலத்தில் உரையாற்றினார். தம்மை ஒரு 'திராவிடன்' என்று அடையாளப்படுத்திய அவர், 'தி.மு.கழகத்தில் இருப்பவர்கள் எல்லாம் திராவிடர்களே தவிர, வேறு சாதியினராக இருக்க முடியாது' என்று அவர் ஆற்றிய ஆங்கில உரை புதிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.